# ★ மீண்டும் தாக்குதலுக்கு ஆயத்தம்; ஹெலிகள் வேவு பார்க்கின்றன

# ஐந்து பொம்பர்கள் பலாலி வந்துள்ளன!

வவுனியாவில் இருந்து பல பொம்பர் விமானங்கள் நேற்று பலாலிக்கு வந்து சேர்ந்தன. இவற்றில் இரண்டு நேற்று அதிகாலை நான்கு மணிக்கு வந்துசேர்ந்தன. ஏனையவை பின்னர் பலாலியை வந்தடைந்தன. மொத்தம் ஐந்து பொம்பர்கள் பலாலியை வந்தடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொம்பர்கள் பலாலியில் தயார்நிலையில் நிறுத்தப்பட்டிருப்பதினால் அடுத்த ஓரிரு தினங்களில் குடாநாட்டில் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நேற்று நண்பகல் அச்சுவேலிப் பகுதியை இரு பொம்பர் விமானங்கள் வட்டமிட்டன. எனினும் தாக்குதல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. தென்மராட்சிப் பகுதியில் கொடிகாமம், பளை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கிராமப்புறங்களில் வேவு நடவடிக்கையில் ஹெலிகப்டர் ஒன்று நேற்று பலமணி நேரம் ஈடுபட்டிருந்தது. நேற்று மாலை இரண்டு பொம்பர்கள் கோப்பாய், கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் தாக்குதல் நடத்தின.


விலை ரூபா 1·25

REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 171 செவ்வாய் 19 - 05 - 1987 (வைகாசி 05) றம்ழான் 20


# ஆனையிறவில் யாழ். பஸ் மீது ராணுவம் ஆர். பி. ஜி. தாக்குதல்

## ஒருவர் பலி; பலர் படுகாயமுற்றனர்

யாழ்நகரில் இருந்து நேற்றுக்காலை கொழும்பிற்கு புறப்பட்டுச்சென்ற தனியார் சொகுசு பஸ் ஒன்று குறிஞ்சாத்தீவிற்கு அருகில் பதுங்கிநின்ற ஆனையிறவு இராணுவத்தினரின் ஆர். பி. ஜி. தாக்குதலுக்கு உள்ளானது.

குறிஞ்சாத்தீவு - புளியடி பகுதியில் கடந்த இரு தினங்களாக தங்கி நிற்கும் இராணுவத்தினரே பஸ்மீது தாக்குதலை மேற்கொண்டனர். 'சேப்ரி' நிறுவனத்திற்கு சொந்தமான பஸ் வண்டி மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த பஸ்வண்டி தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து அதற்கு பின்னால் சென்று கொண்டிருந்த ஏனைய பஸ்வண்டிகள் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்தன. சம்பவம் நடந்தபோது சேப்ரி பஸ்ஸில் அறுபது பயணிகள் வரையில் இருந்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான பஸ் வண்டியுடன் அதில் சென்ற பிரயாணிகள் இராணுவத்தினரால் ஆனையிறவு முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஐவர் காயமடைந்ததாகவும் அரசாங்கம் நேற்றிரவு அறிவித்தது. காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு தடைமுகாமில் குறித்த பஸ்ஸை நிறுத்துமாறு படையினர் விடுத்த உத்தரவை

—6ஆம் பக்கம் பார்க்க

### ★ பிந்திய செய்தி

### 3 பெண்கள் பலி?

ஆனையிறவில் பஸ்மீது ராணுவம் நேற்று மேற்கொண்ட சூட்டுச் சம்பவத்தில் பஸ்ஸில் பயணம் செய்த மூன்றுபெண்கள் மரணமானதாக பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. ஆனாலும் இதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.



கடந்த சனிக்கிழமை மாலை பளையில் ஹெலி நடத்திய திடீர் வேட்டையில் சூடுபட்டு மரணமான இரு அப்பாவிகளின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்டது. (படம்: வி. ஆனந்த்)

# கைதடி, கோப்பாய் பகுதியில் நேற்று மாலை திடீர் பொம்பர் தாக்கு!

(அச்சுவேலி)

கோப்பாய், கைதடி பகுதிகளில் நேற்று மாலை பொம்பர்கள், ஹெலிகப்டர்களின் சரமாரியான தாக்குதல்கள் இடம்பெற்றன.

பிற்பகல் ஐந்தரை மணியளவில் கோப்பாய் - கைதடி வீதியில் வந்து கொண்டிருந்தபோது பழுதடைந்த லொறி ஒன்றைத் திருத்திக் கொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகப்டரிலிருந்து சரமாரியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன இதனால் லொறியின் கிளீனரான நாவாந்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் நவரட்ணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இதனைத்தொடர்ந்து சுமார் ஆறு மணி முதல் இரண்டு பொம்பர்கள் கைதடி, கோப்பாய் பகுதிகளில் சரமாரியாகக் குண்டுவீச்சுத்தாக்குதல்களை மேற் கொண்டன. பொது மக்கள் தற்காப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டதால்பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. அரியாலை குற்றுணியில் பலத்தசேத மேற்பட்டது.

சுப்பிரமணியம் கிரிதரன் என்ற 12 வயதுச் சிறுவன் காயத்துடன் கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக சேத விபரங்கள் பெற முடியவில்லை

# குறிஞ்சாத்தீவில் இருவரை கொலை செய்து அவர்களின் உடலையும் ராணுவம் எரித்தது

குறிஞ்சாத்தீவில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட இவ்விருவரினதும் சடலங்கள் பின்னர் இராணுவத்தினரால் தீவைத்து கொளுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனையிறவுஉப்புக் கூட்டுத்தாபனத்தின்குறிஞ்சாத்தீவு உப்பளஊழியர்களான பரமலிங்கம்(37), பிரகாசம்(39) ஆகிய இருவருமே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமானவர்கள் என தெரியவருகின்றது. இவர்கள் இயக்கச்சியில் இருந்து குறிஞ்சாத்தீவுக்கு வீதியால் சென்று கொண்டிருக்கையில் குறிஞ்சாத்தீவு—புளியடியில் பதுங்கியிருக்கும் இராணுவத்தினர் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

## கமாண்டோக்கள் வந்தனர்

இரண்டு விமானங்கள் மூலம் சுமார் நூறுவரையான விசேட பயிற்சிபெற்ற கமாண்டோக்கள் பலாலி முகாமிற்கு நேற்று கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

முப்படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரண

—6ஆம் பக்கம் பார்க்க

# கண்டிவீதியில் யாழ்.நோக்கி சகலதும் தயார் நிலையில்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறி குறிஞ்சாத்தீவு - புளியடி பகுதியை அடைந்த இராணுவத்தினர் தொடர்ந்தும் அப்பகுதியிலேயே நிலைகொண்டுள்ளனர்.

இவர்கள் அப்பகுதியில் தொடர்ந்தும் தங்கியிருந்து கண்டி வீதியின் வழியாகச் செல்லும் வாகனங்களின் மீது தாக்குதல் மேற்கொள்வதினால் நேற்றும் இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையே போக்கு

—6ஆம் பக்கம் பார்க்க

# கோப்பாயில் ஹெலி சூடு!

## ஒருவர் பலி; மற்றவர் காயம்

கோப்பாய் - கைதடி வீதியில் நேற்று ஹெலிகப்டரொன்று தாழ்வாகப் பதிந்து வந்து வீதியால் சென்றவர்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இருபத்தைந்து வய

—6 ஆம் பக்கம் பார்க்க

## அதிர்ச்சியால் மரணம்

(அச்சுவேலி)

நேற்றுக்காலை 7.30 மணிக்கு வயாவிளான் இராணுவ மினி முகாமில் இருந்தும், தோலகட்டி முகாமில் இருந்தும் ஏககாலத்திற்கு வயாவிளான் வடமூலைப்பக்கமாக வெளியேறிய முன்னூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்களுடன் புலிகள் மூன்று மணித்தியால நேரடிச் சமரில் ஈடுபட்டனர்.

இராணுவத்தின் வருகையினைக் கண்ட வயோதிபர்

—6ஆம் பக்கம் பார்க்க

வர்த்தகர் சங்கம் கண்டனம்

# துறைமுக உணவு இறக்குமதி இராணுவத்தினரால் தடை

யாழ். குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களை இறக்கும் துறைமுகமான காங்கேசன் துறை துறைமுகத்தை இலங்கை ராணுவம் தமது தேவைகளுக்காகப பயன்படுத்துவதுடன், பொதுமக்களுக்கு எந்தவித உணவுப் பொருடகளும் இறக்குமதி செய்யாதவாறு தடைசெயதுள்ளது என யாழ். வர்த்தகர் சங்கம இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் புகார் செய்துள்ளது.

இதனல் மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும் நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வர்த்தகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

எரிபொருள் தடையால் லொறிப போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதால் பிற இடங்களிலிருந்து உணவுப் பொருடகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செயயும் வர்த்தகர்கள் நிறைந்த யாழ்நகரின் அருகேயுள்ள கோட்டை முகாமிலிருந்து தினமும் 'ஷெல்' தாக்குதல்கள் இடம்பெறுவதால் காலங்காலமாக யாழ்நகரில் வியாபாரத்தைமேற்கொண்டு வந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வியாபாரிகள் தமது உடைமைகளையும் உயிர்களையும் இழந்துள்ளனர் எனவும் இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதி தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் அனுப்பி வைககப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் இந்து கலாசார பேரவை

(அரியாலை)

மன்னார் மாவட்டத்தில் இந்து கலாசாரப் பேரவை ஒன்றை அமைப்பதற்கு மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் தீர்மானித்துள்ளது. மன்னார் மாவட்ட இந்துக்களின் கலாசார அபிவிருத்திக்கும், அவர்களின் சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமாகவே இப் பேரவை அமைக்கப்படவிருக்கிறது.

இதன் அங்கத்தவர்கள் மன்னார் மாவட்ட இந்து ஆலயப் பரிபாலன சபைகள், இந்து கலாசார மையங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இந்து சமய வளர்ச்சிச் சங்கம் மன்னார் மாவட்ட இந்து ஆலயப் பரிபாலன சபைகளையும், இந்த கலாசார நிறுவனங்களையும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறது. அத்துடன் இலங்கை வாழ் சைவப் பெரியார்கள், அறிஞர்களிடம் இருந்து இப் பேரவை அமைப்பது தொடர்பாக நல்லாசிகள், அறிவுரைகளையும் இச்சங்கம் எதிர் பார்க்கிறது.

முன்னர் பூசை நடைபெற்ற ஆலயங்களில் தற்போது பூசை நடைபெறாத நிலையினையும், சைவ மக்கள் சமய அனுஷ்டானங்களை கைவிட வேண்டிய சூழ்நிலையினையும், கடந்த சில ஆண்டுகளுள் பல சிறு ஆலயங்கள் மறைந்து போய் விட்டதையும், இந்து சமய வளர்ச்சிச் சங்கம் இச்சந்தர்ப்பத்தில் சைவ உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறது.

கல்வி அமைச்சு உத்தரவு

# மே மாதத்திற்கு முன்னதாக அபிவிருத்திச் சங்க கூட்டம்

(அச்சுவேலி)

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டங்களை மே மாத இறுதிக்குள் கூட்ட வேண்டுமென யாழ். கல்வித் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களையும் பணித்துள்ளது.

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்தின்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் 1987 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டங்களை குறிப்பிட்ட திகதிக்கு முன்கூட்டி அவற்றின் அறிக்கை, கணக்கு, விபரங்கள் புதிய உத்தியோகத்தர் பட்டியல் என்பனவற்றை திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இச்சங்கக் கூட்டத்தைக் கூட்டிய பாடசாலைகள் அறிக்கைகளை உடனடியாகவும், கூட்டப்படாத பாடசாலைகள் தாம் கூட்டவுள்ள கூட்டத்தின் உத்தேச நாள் நேரத்தினையும் கல்வித் திணைக்களத்திற்குத் தெரியப் படுத்தும்படியும் யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி அறிவித்துள்ளார்.


சுந்தரச் சிறுவிளம்பரம்

**சேவை**

பிடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், பாம் முட்டைகள் இவ் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். சிமாட்டி சுமங்கலி, 531, பலாலி வீதி, திருநெல்வேலி. 05046

**ஏலவிற்பனை**

இம்மாதம் 22ம்-23ம்-24ம்-திகதிகளில் மணிக்கூட்டுபகரணங்கள், இரும்புச்சாமான்கள், பலகைகள், விறகு, ஆடு, முயல், லவ்பேர்ட்ஸ் முதலிய பல பொருட்கள் ஏலத்தில் விற்பனையாகும். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட்கோப்பாய் 05056


## கால் நடைகள் மீது சூடு

(காவலூர்)

மண்டைதீவு மினி இராணுவ முகாமிலிருந்து மண்டைதீவை நோக்கி தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு மண்டைதீவு விஷேட சேவை அலுவலர் திரு. சே. சிவநிலசிங்கத்தின் பசுமாடொன்றும் சில ஆடுகளும் இறந்துள்ளன.

மண்டைதீவை நோக்கி தீர்க்கப்படும் வேட்டுக்களினல் பல கால் நடைகள் அடிக்கடி இறந்து வருகின்றன.

# கோழி வளர்ப்பவர்களுக்கு பல விதமான தொல்லைகள்

யாழ். மாவட்டத்தில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருப்போர் தற்பொழுது பொருளாதார ரீதியில் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் கோழித்தீன் வகைகள் கொழும்பு போன்ற பிறமாவட்டங்களில் விற்பனை செய்யப்படுவதைவிட இரட்டிப்பு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோன்றே வளர்ப்பு கோழிக்குஞ்சுகளும் பிறமாவட்டங்களில் இருந்து அதிகவிலை கொடுத்து பல சிரமங்களின் மத்தியில் இங்கு தருவிக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் கொழும்பு போன்ற பிறமாட்டங்களில் இருந்து மலிவு விலையில் தருவிக்கப்படும் பெருந்தொகை முட்டைகள் இங்கு சந்தைக்கு வருவதனல் யாழ். மாவட்டத்தில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருப்போர் முட்டை விற்பனையில் வருமான வீழ்ச்சியை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


# இடமாற்ற அறிவித்தல்

எமது காரியாலயம் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தருகிறோம்

மதுரா வீடியோ கிளப், இல. 96, 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்

என்ற முகவரியிலிருந்த எமது நிறுவனம் தற்போது

97/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் அமைந்துள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய நேரம்

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

★ குவைத் ★ சவூதி

★ ஓமான் ★ டோகா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன தொடர்புகொள்ளவும். கடித மூலம் தொடர்பு கொள்ளவிரும்புவோர் முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகல விதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் கடவுச்சீட்டு (PASSPORT) குறைந்த செலவில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

HORIZON Enterprises

## A. பத்மதாஸ்

இல. 97/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

05043

குறிப்பு: எமது முகவர் நிலையத்தின் பெயரைக்கொண்டு வட பகுதியில் பல மோசடி பேர்வழிகளிடம் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே மீண்டும், மீண்டும் நாம் கூறிக்கொள்வது எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது. தொடர்பு கொள்வோர் நேரில். அல்லது கடிதமூலம் மட்டுமே தொடர்பு கொள்ளுங்கள். எந்தக்காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.



# இடமாற்றம்

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

எமது பிடவை ஸ்தாபனம் தற்போதைய சூழ்நிலை காரணமாக

இல. 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் முன்பாக, வீடியோ பிரசாத்திற்கு அருகாக]

என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைஎமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

05058



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## கெ. ஜனகன்

பொறியியலாளர் கதிர். கெங்ககுமாரன் - வசந்தியின் அன்புமகன் ஜனகன் தனது முதல் பிறந்தநாள் பெருமங்கலத்தை இன்று (19-05-87) இல் லண்டனில் தனது இல்லத்தாருடன் கொண்டாடுகின்றார்.

இவரை P. K. அப்பப்பா, அப்பம்மா, S. T. R. அம்மப்பா, அம்மம்மா, சிவாசித்தப்பா, ராஜேஸ்சித்தி, Dr. பெரியப்பா, பெரியம்மா, சித்திமார், மாமன்மார், பாட்டாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் நல்லைக்கந்தன் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

05051

### நல்வாக்கு

பொறுமையும் பகுத்தறிவும்கொண்டு எதிராளியின் குண தோஷங்களை நன்கு அறிந்து, உரிய காலத்தில் தாக்கும் விரோதியிடம் நம்பிக்கைவைக்காமல், விழித்த கண்ணுடன் கவனித்துவரவேண்டும். — பஞ்சதந்திரப் பொன்மொழி

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## புனித 'பிரேமா'வின் தம்ம போதனை

கடந்த நான்கு வருடங்களாக தமிழர்களின் இனப் பிரச்சினையை பயங்கரவாதிகள் பிரச்சினை என்று தமது அரசியல் நாடகத்துக்குப் பயன்படுத்திவந்த ஜெயவர்த்தன அரசு, இப்போது புதிய ராகமொன்றை இசைக்கத் தொடங்கியுள்ளது.

அதுதான் ஜே. வி. பி. என்ற நவீனராகம். அவர்கள் தனது அரசைக் கவிழ்க்கவும், தலைவர்களைக் கொல்லவும் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

தமிழ்ப்போராளிகளை மார்க்ஸிஸப் பயங்கரவாதிகள் என்றும், சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல பிரிவினைவாதப் பயங்கரவாதிகள் என்றும் கூறி, அதன் மூலம் உலகவங்கி, சர்வதேச நிதியம் ஆகியவைகளிடம் கடன்வாங்கியே அரசாங்கம் கடந்த நான்காண்டுகளையும் ஒருவாறு ஓட்டிவந்துள்ளது.

இனியும் அந்த 'வண்டிலை' உலகத்தின் முன்னால் ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

''தமிழர் பிரச்சினைக்கு இணக்கமான அரசியல்தீர்வு காணப்படாதவரை உதவி வழங்குவதில் அர்த்தமில்லை. அபிவிருத்திக்கான பணத்தை ஆயுதங்களுக்குச் செலவிடுவதா?'' என்று நிதிவழங்கும் நிறுவனங்கள் நிபந்தனைகளை விதிக்க ஆரம்பித்துவிட்டதால் அதி உத்தமர் அவர்களும் அவரது கம்பனியினரும் புதிய ராகத்தை இசைக்கவேண்டிய தேவையேற்பட்டது.

கம்யூனிஸ, இடதுசாரிச் சிந்தனையுடைய, புரட்சிவாத, மார்க்ஸிஸ ஜே.வி. பியினர் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்ற சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என்ற 'வெருட்டலு'டன் இம்முறை எப்படியாவது கடன் வாங்கிவிட வேண்டுமென்பது அதி உத்தமரின் எண்பதுவயது மூளையின் திட்டம்.

ஜே. வி. பி. ஆட்சியைக் கைப்பற்றினால் அமெரிக்காவின் இந்து சமுத்திரப் பிராந்தியச் செல்வாக்கும், பாகிஸ்தான், பிரிட்டன், இஸ்ரேல், சீனா ஆகிய நாடுகள் இலங்கை மீது காட்டிவரும் 'கருணை'யும் செல்லாக்காசாகிவிடும் என்பதை மறைமுகமாகக்கூறி அதன் மூலம் காரியத்தைச் சாதித்துவிடுவதே கிழட்டு மூளையின் சதித்திட்டம்.

சிலவேளையில், ஜே வி.பி. என்ற ஜே. ஆரின் பூச்சாண்டி, விடயம் தெரியாத கடன் வழங்கும் நாடுகளிடம் பலித்தும் விடலாம்.

ஆனால் நாம் இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டிட விரும்புவது மற்றொரு விடயம்.

பயங்கரவாதிகள் என்றும்,முற்றாக ஒழிக்கப்படவேண்டியவர்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துவரும் ஜே. வி. பி.க்காரருக்கு மன்னிப்பு வழங்கத்தாம் தயாராகவிருப்பதாக மாண்புமிகு பிரதமர் பிரேமதாஸ தெரிவித்துள்ளதே எமக்கு விசனத்தைத் தருகின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் ''நீயா நானா பெரியவன்'' என்றவொரு போராட்டம் கடந்த பல மாதங்களாக நடைபெற்றுவருவதை அனைவரும் அறிவர்.

ஜனாதிபதி விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று கூறி வருகிறார்.

ஆனால் பிரதமரோ முதலில் பிரதேச சபைத் தேர்தல்களே நடைபெறும் என்று கூறிக்கொண்டு பிரசாரம் செய்யவும் ஆரம்பித்து விட்டார்.

ஜனாதிபதியின் துணைவியார் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகளிலும் பார்க்க, பிரதமரின் துணைவியாரே கூடுதலான நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதாகவும் கூறப்படுகின்றது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், ஜே. வி. பி.யினரை வானுயரப் புகழ்ந்து, ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளிலும் பார்க்க ஜே. வி. பி. யே கூடுதலான வாக்குகளைப் பெற்றதென்றும் பிரதமர் பிரேமா கூறியுள்ளார்.

நேரடியாக அரசியலுக்கு வருமாறும் ஜே. வி. பி.க்கு அழைப்பு விடுத்துள்ள பிரேமதாஸ, தமது பிரதேச சபைத் தேர்தலிலும் அவர்களைப் போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''எதிரியின் எதிரி எனது நண்பன்'' என்ற அரசியல் சித்தாந்தம் ஜெயவர்த்தனவின் கம்பனிக்குள்ளேயே கழுத்தறுப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

புனிதர் 'பிரேமா' வின் தம்மபோதனை எவ்வளவு தூரம் செயற்படுமென்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

அனுரா பண்டாரநாயக்கா சொல்கிறார்

# இனப்பிரச்சினை முடிவுக்கு 'பகுதி' ராணுவ தீர்வு அவசியம்

வினா: ''பி.ஆர்.'' முறைமையின்கீழ் தமது ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடையாது என ஜனாதிபதி மிகத் திண்ணமாக நம்புகிறார்.

விடை: புள்ளிவிபர வாரியாகப் பாருங்கள்: அது பொய்யாகிவிடும்.

முன்னர் ''பி. ஆர்.'' முறைமை இருந்திருக்குமானால் (அதாவது 1951 ஆம், 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்கள் புறநீங்கலாக) ஐ. தே. கட்சியானது ஒவ்வொரு தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்டு இருக்கும். ''பி. ஆர்.'' நிலவியிருந்தால், 1965 இல் டட்லி சேனநாயக்காகூட பிரதம அமைச்சராகி இருக்கமாட்டார். அப்படிப்பட்ட பொதுத் தேர்தல் பெறுபேறுகள், மிக நெருக்கமானவையாகவே இருக்கும்: பிரதான போட்டியாளர்-கட்சிகள் இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ஒரு பத்து, பதினைந்து ஆசனங்கள் மாத்திரமேயாக இருக்கும்.

வினா: இதுவிடயம் குறித்து நீங்கள் அவருக்குச் சவால் விட்டது கிடையாதே?

விடை: இப்படிப் பொருள்படத்துண்டுப்பிரசுரமொன்றை பா. உ. க்கள் எல்லோருக்கும் நான் அனுப்பிவைத்தேன். ஒரு பாராளுமன்ற உறுப்பினராவது இன்னமும் எனக்குப் பதில் அனுப்பவில்லை.

நான் ஏதாவது பிசகாகக் குறிப்பிட்டு இருந்தேனாகில், அதனை அவர்கள் மறுத்து உரைத்திருப்பார்கள்.

வினா: நாடு அடங்கிலும் பயங்கரவாதிகளின் பயமுறுத்தல் தற்போது நிலவும் சூழலில் எதிர்க் கட்சி(தேர்தலில் வென்றுதான்விட்டாலும்) ஓர் அரசாங்கத்தை அமைத்துக்கொள்ளுதற்குப் போதிய பலம் இல்லாததாகலாம் (அது அப்படித் தோன்றவும் கூடும்)

விடை: அதை நிருணயிக்க வேண்டியோர் மக்களே. எதிர்க் கட்சிக்குப் போதிய பலம் இல்லை என்று சொல்ல அரசாங்கத்திற்கு உரிமை இல்லை. அதனைத் தீர்மானித்தற்கு மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

வினா: வட இலங்கையிலும் கிழக்கு இலங்கையிலும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெற இயலாது. ஆக, ஒரு பொதுத் தேர்தல் நிகழ்த்தப்பெற இயலாததாகிப் போய்விடுகிறது. இதுதான் இன்று இலங்கை அரசாங்கத்தின் கட்சி நிலைப்பாடு.

விடை: அப்படியானால் நீங்கள் எப்படியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் போகிறீர்கள்?

பாராளுமன்றத்தின் வலுவுடைய ஆட்சிக் காலத்தைத்தானும் நீடித்தற்கு இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே ஆகவேண்டும். சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று இன்றியமையாததாகும்.

ஆகவே ஜனாதிபதியால் ஒரு பொதுத்தேர்தல் நிகழ்த்த இயலாது போய்விடுமானால் அவரால் எப்படி ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த இயலக்கூடியது ஆகும்?

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி பஞ்சாப் மாநிலம் தவிர்ந்த ஏனைய எல்லா மாநிலங்களிலும் தேர்தல் நடாத்தினார். அதனையடுத்து பஞ்சாப் தேர்தல் நடைபெற்றது. பஞ்சாப் மாநிலமோ இலங்கையின் விஸ்தீரணம் போலப் பத்து மடங்கு நிலப்பரப்பு உடையது.

வினா: அரசாங்கத்தின் இன்னுமொரு மனத் தாங்கலும் உண்டு. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் தம்மால் இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க இயலும், இயலும், எனக் கூறிவந்துள்ளனரே தவிர, அதனை எப்படித் தீர்த்துவைக்கப்போகின்றனர் என வெளியிடவில்லையே என்பதுதான் அம்மனக்குறை.

விடை: இலங்கையில் தமிழர் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினை எழுந்த ஆரம்ப முதலே எமது அபிப்பிராயம் என்ன என அரசாங்கம் என்றைக்குமே எம்மிடம் உசாவியது கிடையாது அப்படி நேரே கேளாது, வெளியிலே, பகிரங்கமாக: ஸ்ரீ. ல. சு. க. வின் தீர்வு என்ன எனக் கேட்டபடியே இருக்கிறது. எம்மை இக்கட்டான ஒரு நிலைப்படுத்தவே அவ்வாறு கேள்விக்கணை தொடுப்பது அவர்கள் குணம்.

ஜனாதிபதியானவர், தாம் ஒருவர் மாத்திரமே இதற்குத் தீர்வு காண வல்லவரெனத் திட்டவட்டமாக அறிவித்து உள்ளார். தமது தீர்வுப் பிரேரணைகளில் ஓர் எழுத்துத் துணுக்கைத்தானும் அவர் மாற்றப்போவதில்லை என வெளியிட்டுள்ளார்.

இப்பேர்ப்பட்ட சூழலில் எதிர்க்கட்சியினர் தமது பிரேரணைகளை வெளிப்படுத்துவதால் ஆகப்போகும் காரியமோ, பலனோ என்னவாகத்தான் இருக்கப்போகிறது?

**நேற்றைய தொடர்ச்சி**

இந்த அரசாங்கம் இங்ஙனம் எம்மிடம் கேட்டுக்கொண்டு இருப்பதற்கு இன்னுமொரு நோக்கமும் உண்டு: எமது பிரேரணைகளை இன்னவை என அறிந்துகொண்டதும் அவற்றை ஈவிரக்கமின்றி கண்டித்துச் சிறுமைப்படுத்துவது தான் அந்த எண்ணம்.

அரசாங்கம் தொடர்ந்து அரசியல் ஆட்டம் ஆடுமானால் எம்மாலும் அப்படியே ஆட இயலும்.

ஸ்ரீ.ல.சு.க. வின் கொள்கையை அழுத்தம் திருத்தமாக எடுத்து உரைப்பது அக்கட்சியின் கொள்கைதான் — ஆனால், சரியான தருணத்தில்.

வினா: அதைப் பொருட்படுத்தாது, மக்களுக்கு இவற்றை அறியும் உரிமை உண்டு என நீங்கள் நினைக்கவில்லையா? தராசுத் தட்டு இரண்டிலும் இருவேறு உத்தேசங்களையிட்டு அவர்கள் மதிப்பீடு செய்ய வேண்டாமா? அறியாததோர் உருப்படியை கணிப்பீட்டினுள் சேர்த்துக் கொள்வது அவர்களுக்குச் சாத்தியமல்ல.

விடை: சரியான தருவாயில் அவர்கள் அறிவார்கள்—பாராளுமன்றம் கலைக்கப்படும் போது.

வினா: அரசாங்கம் உங்கள் பிரேரணைகளைச் சின்னாபின்னமாக்கிச் சிறுமைப்படுத்துவது சம்பந்தமற்றதாகலாம். இருந்தும் அறியும் உரிமை மக்களுக்கு உண்டு..... இது நல்லதா, அது நல்லதா என நிதானித்துத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கு.

விடை: அறியும் உரிமை சனங்களுக்கு உள்ளதுபோலவே அறியத்தரும் உரிமை எதிர்க் கட்சிக்கு இருக்கிறது. எப்போது? அதுதான் கேள்வி. அவர்கள் அறிந்தாலும்கூட, அதைக்கொண்டு அவர்களால் என்னதான் செய்யமுடியும்? மக்களானோர் தமது அபிப்பிராயங்களை எடுத்துக்கூற வாய்ப்பு இல்லாது போய்விடுமானால், இவ்வாறு நிதானித்த பின் அவர்களால் செய்யக்கூடியது என்ன?

வினா: ஆனாலும், உங்கள் பிரேரணைகள் அவர்களுடையவற்றைவிடச்சிறந்தனவாயின், அவர்கள் (பொதுமக்கள்) தமது அபிப்பிராயத்தை அவ்வாறே தெரிவித்து, ஒருமாற்றத்தை உண்டாக்கலாம் அல்லவா?

விடை: நாம் மற்றச் சாராரைவிடச் சிறந்தவர்களாக உள்ளமையை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். என்றாலும் தாம் தெரிந்தெடுப்பதைச் செயற்படுத்த நிச்சயம் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடையாது. சரியான நேரம் வரும்போது விரும்பியதைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பை அவர்களுக்குக் கொடுப்பதே சாலச்சிறந்ததாக இருக்கும்.

நாம் கூறுவதை ஐ. தே. க. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

வினா: அது ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில், உங்கள் பிரேரணைகள் உண்மையாகவே மற்றதைவிடச் சிறந்தன. என்று மக்கள் உணர்வார்களானால் அதே காரணங்களின் அடிப்படையில் அவர் அரசாட்சி மாற்றம்கோரி உண்மையான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம் அன்றோ?

விடை: மக்கள் பொதுத் தேர்தல்மீது ஒரு தாக்கம் ஏற்படுத்தலாம் என நாம் உணரும் பட்சத்தில், சரியான தருணத்தில் நாம் ஒரு பிரகடனம் செய்வோம்; அல்லது அதன் முன்னேயே யாகவும் இருக்கலாம்.

ஆனால் ஒரு வினா இன்னமும் எழுந்தபடியே இருக்கிறது: பயங்கரவாதத்தை எதிர் கொள்ளும் தைரியம் இந்த ஐ. தே. க. அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

இலங்கை அரசாங்கம் மனங்குழம்பி, குளறுபடியாகச் செயலாற்றுகிறது: இவ்வண்ணமாக — வேறு சந்தர்ப்ப சூழ்நிலையிலாக இருந்தாலும்- திரு. ராஜீவ் காந்தி எடுத்து இயம்பியுள்ளார்.

இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பயங்கரவாதத்தைச் சாட முன்வரவேண்டும். அதன் பின்னர் ஒரு தீர்வை அது வகுத்துக் கொள்ள வேண்டும். நான் சில உதாரணங்களை எடுத்து முன்வைத்தேனே? இங்ஙனம் தீர்வு காண்பதில் முழுமனதாகத் தம்மை அரசாங்கத்தினர் ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பதை இவ்வெடுத்துக்காட்டுகள் நிரூபிக்கின்றன.

வினா: நீங்கள் காணவுள்ள தீர்வு என்ன வகையானது இராணுவத் தீர்வா, அரசியல் தீர்வா?

விடை: தீர்வு, அவையிரண்டுமானதாகி இருத்தலே வேண்டி உள்ளது.

அது ஓர் இராணுவத் தீர்வு அல்லது அரசியல் தீர்வு என்று இருக்க முடியாது. நான் பகுதி இராணுவத் தீர்வொன்றைப் பிரேரித்த போது, அவர்கள் அதனை ஆதரிக்கவோ, அனுமதிக்கவோ இல்லை. அரசியல் தீர்வு மாத்திரம் உசிதமானது, என்றனர் அவர்கள்.

பாராளுமன்ற அவசர அ[illegible]

...5 ஆம் பக்கம் பார்க்க

ஏழாலை சைவ மகாஜன மாணவருக்கு பாராட்டு:

# அகதிகளுக்கு உதவும்பணியில் மாணவர்களின் முன்மாதிரி

(உடுவில்)

"உலக நாடுகள் பலவற்றிலுமிருந்தும் இலங்கையில் அதிக எண்ணிக்கையிலுள்ள தமிழ் அகதிகளுக்கென அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் உரியவர்களிடம் வந்து சேராது தடுக்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் மாணவர்களாகிய நீங்கள் அகதிகளுக்கென சேர்த்து வழங்கிய இப்பொருட்கள் மிகச் சிறப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்கீடு செய்யப்படுமென உறுதியளிக்கிறேன் உங்களின் இம் முன்மாதிரியான செயலை ஏனைய பாடசாலைகளும் பின்பற்றினால் எமது பிரதேசத்திலுள்ள அகதிகளுக்கான உணவுப் பங்கீடு சுலபமாகிவிடும்."

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கூட்டாக அகதிகளுக்கான பொருட்களைச் சேர்த்துக் கையளித்த போது அவற்றைப் பெற்றுக் கொண்ட சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு.தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு.ரீ. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் இக் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## நோயாளருக்கு பரிசில்கள்

(வட்டுக்கோட்டை)

காட்டுப் புலத்திலுள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒழுங்கான முறையில் மருந்துகளை உட்கொண்டு வந்தால் அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுமென சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மில்க்வைற் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

திருநெல்வேலிப் பொதுச் சந்தையைத் துப்புரவாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்கு உதவும் முகமாக மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா, பத்துக்குப்பைத்தொட்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

சந்தையில் சேரும் குப்பை கூழங்களை எல்லா இடங்களிலும் வீசி எறியாது இக் குப்பைத் தொட்டிகளில் போடுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுகப்பட்டுள்ளது.

## சங்காபிஷேகம்

முகமோட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய மணவாளக்கோல திருவிழாவை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை சகஸ்ர சங்காபிஷேகமும் விஷேச உற்சவமும் நடைபெறவுள்ளது. பகல் அன்னதானமும் வழங்கப்படும்.

கருத்தரங்கில் காவலூர் பங்குத்தந்தை:

## தீவக பனம் பொருட்களை சந்தைப்படுத்த முடியவில்லை

(காவலூர்)

தீவுப்பகுதியில உற்பத்தி செய்யப்படும் பனை உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாது உற்பத்தியாளர்கள் பெருங் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இந்த வகையில் பனை அபிவிருத்திச் சபையின் முழுமையான பயனை உற்பத்தியாளர்கள் அனுபவிக்க முடியாதநிலைமை இருக்கின்றது.

மேற்கண்டவாறு காவலூர் புனித சென். மேரீஸ் பாடசாலை மண்டபத்தில் நடந்த பனைவள அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய காவலூர் பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய கிருபானந்தன் அடிகளார் தெரிவித்தார்.

காவலூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். ஜீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் வண. பிதா கிருபானத்தன் தொடர்ந்து பேசுகையில்;

பனையை நம்பி வாழும் மக்களுக்கு பனை அபிவிருத்திச்சபை பயன்பட வேண்டும்.

கடகம், சுளகு, பாய், ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு போன்ற உற்பத்திகளை தொழிலாக மேற்கொண்ட இப்பகுதி மக்கள் பனையை மூலவளமாக நம்பி வாழ்பவர்கள்.

தரகர்களாலும், சுரண்டல் பேர்வழிகளாலும் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்களானால் சந்தைப்படுத்தும் சேவையால் எந்த விதமான பயனும் இருக்கமுடியாது. பனை வளமும், உற்பத்தியாளர்கள் தொகையும் அதிகமாக உள்ள தீவுப்பகுதியில் இன்று பிரயாணக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப் பகுதி உற்பத்தியாளர்களின் நன்மை கருதி தீவுப்பகுதியில் கொள்வனவு நிலையம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை இயங்கவைத்து இப்பகுதியின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என்றார்.

காவலூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். ஜீவரத்தினம் தலைமையுரையில் கருத்து தெரிவிக்கையில்;

பாவனைப் பொருட்களையும், பனை உணவுப் பொருட்களையும் மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்துவதன் மூலம் இவற்றின் தேவைகளையும், பாவனைகளையும் விரிவுபடுத்த முடியும் என்றார்.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் திரு. எஸ். பாலசிங்கம் பதிலளித்து உரையாற்றினார். கிராமசேவை அலுவலர் திரு. செ.மனோகரன், உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சுந்தரலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## அஸ்தி கையளிப்பு

(அரியாலை)

கடந்த மாதம் 28 ஆம் திகதி மன்னார் - சங்குப்பிட்டி வீதியில் சுடப்பட்டு மரணமான மன்னார் கச்சேரி ஊழியர் புள்ளிவிபர ஆய்வாளர் திரு.ஏ. ஈஸ்வரம் (32) அவர்களின் அஸ்தி இம்மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது.

புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு.கே.மகேந்திரலிங்கம் அஸ்தியைக் கொண்டுவந்து அன்னாரின் இல்லத்தில் ஒப்படைத்தார். அமரர் ஈஸ்வரத்தின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு மன்னார் கச்சேரி ஊழியர்கள், பஸ் டிப்போ ஊழியர்கள், ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்கள் அதிக சிரத்தை எடுத்திருந்தனர். இம்மாதம் 3 ஆம் திகதி அன்னாரின் சடலத்தை எரித்து அஸ்தியை எடுப்பதற்குக் கிராம சேவையாளர் திரு. எஸ். சிவஞானம் அவர்கள் முன்னின்று செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் நெடுந்தீவு விஜயம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பகுதியிலுள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் ஆசிரியர், மாணவர்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிய யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் இன்று செவ்வாய்க்கிழமை அங்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

நெடுந்தீவு கொத்தணி பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளாங்குளத்தில்

## ராணுவ முகாம் மூடப்பட்டது மக்கள் வீட்டுக்கு திருப்பம்

(சிறப்பு நிருபர்)

மன்னார் வெள்ளாங்குளத்திலும் பூநகரி நாச்சிக்குடாவிலும் கடந்த ஒரு மாத காலமாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ சிப்பாய்களுடன் இயங்கி வந்த இராணுவ முகாம்கள் கடந்த வாரம் மூடப்பட்டதன் பயனாக அப்பகுதியில் இருந்து முற்றாக வெளியேறிய பொதுமக்கள் தத்தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வீடுகளுக்குத் திரும்பியவர்கள் கொடுத்த தகவலின்படி அநேக வீடுகளில் பெறுமதிமிக்க பொருட்களெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இரண்டாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பித்தும் பல பாடசாலைகள் வெறிச்சோடிக் காட்சியளிக்கிறது. மிகக் குறைவான மாணவர்களே பாடசாலைக்குச் சமுகமளித்தார்களெனத் தெரிகிறது.

இதே நேரத்தில் இலுப்பைக்கடவை ம.வி.யில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால் அப்பாடசாலை நடைபெறாததால் பெற்றோர் மிகுந்த கவலை கொண்டுள்ளனர்.

## விபரங்கள் சேகரிப்பு

தொண்டமானாறு பகுதியில் 01. 10. 86க்குப் பின்னர் முப்படைகளினதும் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள் கெருடாவில் பகுதி பிரஜைகள் குழுவினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கென விநியோகிக்கப்படும் படிவங்களில் விபரங்களை குறித்துத் தருமாறு கெருடாவில் பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

## ஆலய உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவநாள் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்று 20ஆம் திகதி புதன்கிழமை காலை திருப்பலிப் பூசையும் பின்னர் திருச்சொரூப தேர்ப்பவனியும் நடைபெறும்.

## முதலாவது ஆண்டு விழா

(எழுதுமட்டுவாழ்)

ஒரு சனசமூக நிலையம் வளர்ச்சியடைய நிர்வாகிகள் மட்டுமல்ல ஒவ்வொரு அங்கத்தவரும் முன்வந்து பாடுபடவேண்டும். இந்நிலையத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு அங்கத்தவரும் நிர்வாகிகளுக்கு தங்களால் இயன்ற ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள் என்பதை இந்நிலைய வளர்ச்சி ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இப்பகுதி மக்கள் சனசமூக நிலையத்தின் வளர்ச்சியுடன் நின்றுவிடாமல் இங்கு பிறந்த ஒவ்வொருவரும் சிறந்த கலைஞனாகவோ அன்றி சிறந்த விளையாட்டு வீரனாகவோ திகழ்வதற்கு கலைத்துறையும் விளையாட்டுத்துறையும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு முகமாலை வள்ளுவன் சனசமூகநிலைய முதலாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.ஏ. பீ ஜோர்ஜ் குறிப்பிட்டார்.

நிலையத்தின் காப்பாளரான திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுகையில், "முகமாலையில் மூன்று சனசமூக நிலையங்கள் இருந்தபோதிலும் இந்நிலைய அங்கத்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு தங்களது பங்களிப்பை செய்ததினால் இவ்விழாவை சிறப்புறச் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது" என்றார்.

## பன்குளத்தில் ராணுவம் பலி

கடந்த வியாழக்கிழமை பன்குளம் பகுதியில் புலிகள் மேற்கொண்ட மற்றொரு கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்துக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.45 மணியளவில் முன்னர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்திலிருந்து இருநூறு யார் தூரத்தில் இக் கண்ணிவெடித்தாக்குதல் இடம் பெற்றது இதில் படையினரின் வாகனமொன்று முற்றாக சேதமடைந்ததாகவும், காயமடைந்த படையினர் ஹெலிகாப்டர் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழு நியமனம்

புங்குடுதீவு பாணவிடை சிவன்கோவில் பரிபாலன சபையின் 1986 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு அறிக்கை இவ்வாண்டு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வழமை போல அச்சிட்டு வெளியிடப்படவில்லை.

இலட்சக்கணக்கான ரூபாவுக்கான இந்த வரவு செலவு அறிக்கைபற்றி ஆராய்ந்து உண்மைவிபரங்களை வெளியிடவென ஐந்துபேர் கொண்ட குழுவொன்று பொதுக் கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## கிராமசேவகர் பிரிவுகள்

(நாயன்மார்கட்டு)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் ஆறு புதிய கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் ஏற்கனவே பதினொரு கிராமசேவையாளர் பிரிவுகள் இருந்து வந்தன. அதிகரிக்கப்பட்ட பிரிவுகளுடன் பதினேழு கிராம சேவையாளர் பிரிவுகள் வலிகிழக்குப் பகுதிக்கு இயங்கவிருக்கின்றன. ஆறு இப்புதிய பிரிவுகளும் உதவி அரசாங்க அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பத்தமேனி, அச்சுவேலி, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி, உரும்பராய் ஆகிய பிரிவுகளிலும் இந்த ஆறு பிரிவுகள் அமைந்துள்ளன.

## ஐநூறு ரூபா நிதியுதவி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கில் கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாகக் கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச்சங்கம் சங்க அங்கத்தவர்களைக் கோழி வளர்ப்பு, சிறுகைத்தொழிற் துறைகளில் ஈடுபடுத்தி வருகின்றது.

இத்திட்டத்திற்கு ஊக்கமளிக்கும் முகமாகச் சங்க அங்கத்தவர்கள் ஒன்பது பேருக்குச் சுயமுயற்சி ஊக்குவிப்புக் கடனாகத் தலா ஐநூறு ரூபா வீதம் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.


பிரயாணத்திற்கு தயாராகுங்கள்

★ London
★ Norway ★ Germany
★ France ★ Canada

QATAR ( Open Visa)

1. Labourers - 450 Q.R
2. Carpenters - 700 Q.R
3. Masons - 700 Q R
4. Painters - 750 Q.R

நேரவே செல்வதற்கு துரித கதியில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

SINGAPORE

1. Labourers (Building Construction & Shipyard)
2. House Maids

GLORIA TRAVELS

08026

சின்னத்தம்பி அவெனியூ - மானிப்பாய்

எமக்கு வேறு கிளைகள் கிடையாது.

# பொசுப பொழுது

தமிழீழ விடுதலைக்குப் போராடும் தமிழ் இளைஞர்களுக்கு இலங்கை அரசாங்கம் சூட்டியுள்ள பெயர் 'பயங்கரவாதிகள்'.

திர்புப் பேச்சுக்கு போராளிகள் சென்றபோது மட்டும் இவர்களை தீவிரவாதிகள் என்று ரேடியோவும், ரூபவாஹினியும் குறிப்பிட்டன.

பேச்சு தோல்வியில் முடிந்த பின்னர் மீண்டும் பயங்கரவாதிகள்தான்.

ஆனல் பஞ்சாப்பில் இப்போது கொலைகளையும், கொள்ளைகளையும் செய்துவரும் சீக்கியர்களை எங்களின் ரேடியோ மிகவும் அன்பாக 'போராளிகள்' எனக் குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ் காந்திக்கு எதிராக இவர்கள் போராட்டம் நடத்துவதால் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சிதான் சீக்கியர்களை போராளிகள் என குறிப்பிடத் தூண்டியிருக்கலாம்.

இலங்கையின் இவ்வாறன இரட்டைவால்தன்மையை ''சமதர்ம தர்மிஷ்ட, சோஷலிஸ ஜனநாயக கொள்கை'' என்று கூறினல் தவருக இருக்க முடியாது.

★ உக்கிரன்

## இன்றைய பலன்

**மேடம்:** செய்தொழில் விருத்தி, பெரியோர்கேண்மை, புத்திரரால் நன்மை, பூமிப் பேறு, மாதர்நட்பு, தனலாபம்.

**இடபம்:** வித்துவத் தன்மை, தொழிற்சிறப்பு, வியாபாரத்தில் அதிகலாபம், வாகனவசதி, பணவரவு.

**மிதுனம்:** பணமுடை, பொருள் நஷ்டம், வயிற்றில் ரோகம். விஷஜெந்துக்களால் பீதி, வீண் அலைச்சல்.

**கடகம்:** அலங்காரப்பேறு, ஆடம்பரவாழ்வு. மங்கையர் நேசம், தனதானிய விருத்தி, பதவி உயர்வு.

**சிங்கம்:** வயிற்றில்கோளாறு, வாகனச்செலவு, பிரயாணக் கஷ்டம், பெரியோர் உதவி, பணமுடை.

**கன்னி:** பொன்பொருட்சேர்க்கை, சுபசெய்தி, தனதானிய லாபம், மாதர் நட்பு. மன நிறைவு.

**துலாம்:** வாகனதிகளால் நஷ்டம், நண்பர்களால் தொல்லை, காரிய தாமதம், அலைச்சல் அதிகம்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சிஅதிகம், கல்வியால் மேன்மை, காரிய பலிதம், வெற்றிக் களிப்பு, நல்லோர் உறவு, கடன் தொல்லை.

**தனுசு:** வாக்குக்கலகம், வீண் சண்டை, வணிகர்களுக்கு வருவாய்க்குறைவு, புதுத்தொழில், வெளியூர்ப்பயணம்.

**மகரம்:** கன்னியர்க்கு நன்மை, காதலில் வெற்றி, பணமுடை நீங்கும், செய்தொழிலால் சிறப்பு, கல்வியால்மேன்மை.

**கும்பம்:** கைப்பொருள் நட்டம். வீண் விரயம், கொடுக்கல் வாங்கல் சிக்கல், தூரத்துச் செய்தியால் கவலை.

**மீனம்:** தாராளமான பணப்புழக்கம், பெரியோர் ஆசி, நண்பர்கள் உதவி, மாதா வழிச்சொத்து.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## அனுமதி

(பூநகரி)

பல்கலைக்கழக கட்டடக் கலைஞர் பீடத்துக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து இம்முறை ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியான செல்வி குமுதினி கைலைநாதன் கட்டடக் கலைஞர் பீடத்துக்கு தெரிவு செய்யப் பட்டவராவர்.

இவர் தமது கல்வியை மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொடர அனுமதி கிடைத்துள்ளது.

## இனப்பிரச்சினை..

...3ஆம் பக்கத் தொடர்ச்சி

வுகளின் போது இவ்விடயத்தை நான் கொண்டுவந்தேன். அப்போது பிரதம அமைச்சரும், தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் என்னை எள்ளி நகையாடினர். சர்வாதிகாரி அடோல்ஃவ் ஹிட்லரைப் போன்று நாமும் இருத்தல் வேண்டும் என்பது உங்கள் விருப்பமா? என்று அவர்களில் சிலர் என்னிடம் மாறுத்தரம் தொடுத்தனர்.

இப்பொழுது அவர்களே பகுதி இராணுவத் தீர்வை நாட முற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் அப்படி நாடுவதால் நூற்றுக்கணக்கான குடிசனங்கள் இறக்கவேண்டி இருக்கிறது. வடக்கு இலங்கையில் தமிழர்கள், தென்னிலங்கையில் சிங்களவர். பகுதி இராணுவத் தீர்வு கட்டாயமாக நாடப்பட வேண்டியது என நான் நினைக்கிறேன்"

இணக்கப் பேச்சுக்கள் நடைபெறும் மேசைக்கு இப்புலிகளை கொண்டுவருவதற்கு வேறுவழி இல்லை. ஏனெனில் இந்தியா தனது சக்திப்பலத்தை இழந்துவிட்டது.

வினு: மறுபுறத்தில், திருபதி பண்டாரநாயக்க, தாம் ஆட்சிபீடம் அமர நேருமானல் பிரபாகரனுடன் கதைக்கமாட்டார் எனக் கூறியுள்ளார்.

அதன் அர்த்தம், இந்திய மத்தியஸ்தம் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, பகுதி அரசியல் தீர்வுகூட நிராகரிக்கப்படுகிறது என்பதாகும்.

விடை: சாத்தியமான இடத்து, தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகளோடு பேச்சு நடத்துவதே அதைவிட மிக உசிதமானது இதையே அவர் கருதினர் என நான் நினைக்கிறேன்.

பிரபாகரன் வசம் துப்பாக்கிகள் உள்ளன. இருந்தாலும், தமிழ் மக்களின் ஆதரவு அவர்பக்கமாக இருக்கிறது.

யாரோ ஒரு தான்தோன்றித் தனமான தலைவரோடு உரையாடுவதைவிட தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவது எவ்வளவோ சிலாக்கியமானது.

## அம்மன் ஆலயத்தில் களவு

(கல்வியங்காடு)

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலில் நேற்று முன்தினம் இரவு உட்புறத்து மண்டப ஓடு பிரித்து உள்ளே இறங்கிய கள்வர்கள் சுவர் மணிக்கூடு ஒன்றையும், அம்மனின் கழுத்தில் அணியப்பட்டிருந்த தலிப் பொட்டையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

ஈராக்கிய விமானம்

# அமெரிக்க கப்பல் மீது ஏவுகணைத் தாக்குதல்

(வாஷிங்டன்)

அமெரிக்க யுத்தக்கப்பலொன்று வளைகுடாவில் ஈராக்கின் விமான ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதம் அடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் இப்பொழுது தீ பற்றிக்கொண்டுள்ளதாகவும் அதிலிருந்த துருப்புகளில் பலர் இறந்திருக்கலாம் எனவும் மேலும் அஞ்சப்படுகிறது.

மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் அந்தக் கப்பலை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மிக சக்திவாய்ந்த எஸ்.எஸ். ரக ஏவுகணைகள் இந்தத் தாக்குதலுக்கு பிரயோகிக்கப்பட்டுள்ளதாக வாஷிங்டன் தெரிவித்துள்ளது.

இந்தத்தாக்குதல் தவறுதலாக நடந்துவிட்ட பிழை என ஈராக் வருத்தம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த தாக்குதலுக்கான பூரண விளக்கத்தை ஈராக் உடனடியாக தெரிவிக்க வேண்டும் என அமெரிக்க ராஜாங்கஅமைச்சர் ஷுல்ட்ஸ் கேட்டுள்ளார். பாக்தாத்திலுள்ள அமெரிக்கத் தூதர் மூலம் இந்த செய்தி கையளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தோடு ரஷ்ய எண்ணெய்க் கப்பல் ஒன்றும்

**ரஷ்யாவில்**

குவைத் கரையையடுத்த பகுதியில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

வளைகுடாவில் மேற்கொள்ளப்படும் இப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

## ஹரியாஞ சட்டசபை தேர்தல்

(புதுடில்லி)

ஹரியாஞ சட்டப்பேரவை பதவிக் காலம் இம்மாதம் 23ஆம் திகதியுடன் முடிவடைவதையடுத்து அங்கு சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜூன்மாதம் 17ஆம் திகதி தேர்தல் நடைபெறும்.

## பஞ்சாப்பில் தேடுதல்தீவிரம்; டில்லியிலும் பாதுகாப்பு

(புதுடில்லி)

பஞ்சாப்பில் தீவிரவாதிகளைத் தேடும் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை புதுடில்லியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள பலப்படுத்தப்பட்டுள்ளன.

பஞ்சாப்பில் இதுவரை 811 தீவிரவாத சந்தேக நபர்களை அரசு கைது செய்துள்ளது. இவர்களில் முன்னுள் அமைச்சர்கள் இருவரும் வேறு சில முக்கியஸ்தர்களும் அரசு அதிகாரிகள் சிலரும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் மறைவிடங்கள் என சந்தேகிக்கப்படும் இலக்குகளை நோக்கி பொலிஸ், பாரா- இராணுவ படையினர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை பஞ்சாப் தீவிரவாதிகள் பலர் புதுடில்லிக்குள் ஊடுருவியுள்ளதாகவும் பெரியதொரு தாக்குதல் நடவடிக்கையொன்றை அவர்கள் அங்கு மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இத்தகவலையடுத்து புதுடில்லி நகரப் பகுதிகளிலும் வேறு இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

யாராலும் உரிமை கோரப்படாத பொருட்களையோ பொதிகளையோ தொடவேண்டாமெனவும் அவற்றுக்கு அண்மையில் செல்ல வேண்டாமெனவும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறும் டில்லி அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## ஆபிரிக்க நிதியத்துக்கு லிபியா ஒருகோடி டாலர்

(திரிப்போலி)

ஆபிரிக்க நிதியத்துக்கு லிபியா ஒருகோடி டாலரை வழங்கியுள்ளது. இத்தொகையின் அரைப்பங்கு உதவிப் பொருட்களாக வழங்கப்படும் எனவும் மீதம் ரொக்கமாக அளிக்கப்படும் எனவும் லிபிய அரசு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிதியத்துக்கென எதிர்பார்க்கப்பட்ட இலக்கான பத்துக்கோடி டாலரை இது விஞ்சசெய்து விட்டதாக நிதிய நிறுவன செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜிபூதி இதற்கு பத்தாயிரம் டாலரை அளித்துள்ளது. பாரதம் நான்கு கோடி டாலரை வழங்கி இந்த நிதியத்தை ஆரம்பித்து வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மொழி சிறுகதை மொழிபெயர்ப்பு வெளியீடு

''மண்ணின் மக்கள்'' என்ற தலைப்பில், இந்திய மொழிச் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்று ரஷ்யனில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது; மாஸ்கோவிலுள்ள 'ராதுகா' (வானவில்) பதிப்பகம், இதைவெளியிடவிருக்கிறது.

தமிழிலிருந்து ''எங்கோ ஓர் இதயம்'' என்ற தொகுப்பையும், தெலுங்கிலிருந்து ''நம்ம ஊர் சிரிவாடா'' என்ற தொகுப்பையும், பஞ்சாப்பிலிருந்து ''ஐந்து சகோதரிகள்'' என்ற தொகுதியையும், வங்காளியிலிருந்து ''இரவுப் பறவை'' என்ற தொகுப்பையும் ரஷ்ய மொழிபெயர்ப்பு நூல்களாக 'ராதுகா' ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

''சரத்கால மழை'' என்னும் தலைப்பில் கேரள எழுத்தாளர்களின் படைப்புக்களது மொழிபெயர்ப்பையும் சென்ற ஆண்டில் அது வெளியிட்டுள்ளது.

## பிஜியில் ஜனநாயக ஆட்சி மீண்டும் வரவேண்டும்

### நியூஸிலாந்து பிரதமர் டேவிட்லாங்கே

(வெலிங்டன்)

இராணுவ சதிப்புரட்சி மூலம் அரசு கவிழ்க்கப்பட்டுள்ள பிஜியில் மீண்டும் ஜனநாயகத்தை நடைமுறைக்குக் கொண்டுவர எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக நியூஸிலாந்து அரசு தெரிவித்துள்ளது.

நியூஸிலாந்து பிரதமர் டேவிட் லாங்கே பிஜியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிஜி பிரதமர் பவேத்ராவுக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாதேசாதிபதியும் இராணுவ சதிப் புரட்சித் தலைவரான கேணல் ரம்புக்காவும் வானெலியில் கூட்டாக உரையாற்ற இருப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே பிரதமர் லாங்கே இந்தக் கடிதத்தை அனுப்பினர்.

ஏனினும் குறிப்பிட்ட அந்தக் கூட்டு வானெலி உரை இதுவரை இடம் பெறவில்லை என தெரிவிக்கப் படுகிறது. எனிலும் பிஜி வானெலியில் உரையாற்றிய கேணல் ரம்புக்கா வெளிநாட்டுப பத்திரிகையாளர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும், இல்லையெனில் அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

பிஜியில் பொதுமக்கள் இராணுவ அரசுப் பிரகடனத்துக் கெதிராக கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மீது இராணுவம் கடுமையான நடவடிக்கைகளை கையாண்டுவருவதாக கண்டிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய தூதரக ராஜதந்திரி ஒருவரும் பி. பி. சி. செய்தியாளரும் அங்கு பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியாளர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட பின் சூவா விமானத்தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நிலைமை அங்கு ஸ்திரமாக இல்லை எனவும் குண்டு வெடிப்பு சம்பவங்களும் ஆங்காங்கு சில இடங்களில் இடம்பெற்றதாகவும் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19-05-1987 செவ்வாய்க்கிழமை

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

★ டாக்டர்கள் குழு யாழ். திரும்பியது

# புலிகள் நிபந்தனை மீண்டும் நிராகரிப்பு!

யாழ். வைத்தியசாலை தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த யாழ். வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சி.எஸ். நச்சினார்க்கினியனும் டாக்டர் ஜெகாபசுபதியும் நேற்று யாழ். வந்து சேர்ந்தார்கள். விசேட விமானத்தின் மூலம் பலாலி வந்த இருவரும் யாழ். வைத்தியசாலை அம்புலன்ஸ்வண்டி மூலம் யாழ்நகர் வந்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்ற புலிகளின் கோரிக்கை அரசால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வியாழன் யாழ். வந்த இக் குழுவினர் வெள்ளிக்கிழமை புலிகளின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு மீண்டும் கொழும்பு திரும்பினார்கள்.

வெள்ளிக்கிழமை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடாத்திய போது அவர் முன்பு தெரிவித்தது போலவே செஞ்சிலுவைச் சங்கத்தினரை இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்துவிட்டார்.

எனினும் யாழ். வைத்தியசாலையை மூடுவதோ வேறு இடத்திற்கு மாற்றுவதோ இன்றைய நிலையில் சாத்தியமாகாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் குழுவினருடன் கொழும்பு சென்றிருந்த டாக்டர் எஸ். சிவகுமாரன் கடந்த சனிக்கிழமையே யாழ்ப்பாணத்திற்கு பஸ் மூலம் புறப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து பிரச்சினை காரணமாக இவர் கிளிநொச்சியில் தங்கி நிற்பதாகவும் கூறப்படுகிறது.

## முக்கியமான சில செய்திகள்

### விமலேஸ்வரனுக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப் பொருளை நாட்டினுள் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த வேலுப்பிள்ளை விமலேஸ்வரன் என்ற தமிழ் இளைஞருக்கு நீர்கொழும்பு நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர் கடந்த 1986ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருளை கடத்திய போது கைது செய்யப்பட்டிருந்தார்.

### இரத்மலானையில் தீ! 5 இலட்சம் நஷ்டம்

இரத்மலானை புகையிரத வேலைத் தலத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய தீவிபத்தினால் சுமார் ஐந்து லட்சம் ரூபா சேதமேற்பட்டுள்ளது.

இங்கு மறுசீரமைக்கப்பட்டு சேவைக்குவிட தயாரான நிலையில் இருந்த பல புகையிரதப் பெட்டிகள் இத் தீவிபத்தினால் முற்றாக சேதமடைந்தன. இந்த புகையிரதப் பெட்டிகளை வடபகுதிக்கான யாழ்தேவிரயிலில் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததினால் இது ஒரு நாசவேலையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### சலதி அறிமுகம்

முரசொலி வெளியீடான 'சலதி' நூல் அறிமுகவிழா 20ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் மூன்றுமணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பல்கலைக்கழக தமிழ்மன்ற தலைவர் திரு. செ. சக்திதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் தமிழ்மன்ற துணைச்செயலாளர் செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார். திரு. பொ அருந்தவநாதன், செல்வி சு. சுகந்தி, கலாநிதி நா. சுப்பிரமணியன், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

### 'கைஸ்' நடத்தும் கொடிதினம்

கடந்த 27ஆம் திகதி புலோலியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினால் சேதமான மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் வகுப்பறைக் கட்டடம், பாடசாலை மண்டபம் அதிபர் அலுவலகம் என்பனவற்றை திருத்தி அமைப்பதற்கு 'கைஸ்' மாணவர் இளைஞர் மன்றத்தின் பருத்தித்துறைக்கிளை முன்வந்துள்ளது. இதற்கான நிதி கொடி விற்பனைமூலம் பெறப்படும். இந்த கொடிதினம் பருத்தித்துறைப் பிராந்திய பாடசாலைகளில் 21ஆம் 22ஆம் திகதிகளில் நடைபெறும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை 'கைஸ்' கோரியுள்ளது.

### பலாலியிலிருந்து பதினான்கு பேர் விடுதலை

பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் பலாலி ராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களில் பதினான்கு பேர் நேற்று முன்தினம் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களை மயிலிட்டி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. வீ. இரட்ணராஜா பலாலி முகாமில் பொறுப்பேற்று அழைத்து வந்தார். திருகோணமலை முல்லைத்தீவு, குருநகர், நெடுந்தீவு, பெரியவிளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களாவர்.

### யாழ். பயணிகள் முறிகண்டியில்

ஆனையிறவு தடைமுகாம் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த பெருமளவு பயணிகள் முறிகண்டியில் தங்கி நிற்பதாகத் தெரியவந்துள்ளது.

### மலையகத்தில் பலமான பாதுகாப்பு

மலைநாட்டின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தற்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெளியிடங்களில் இருந்து கண்டிக்கும் வேறு முக்கிய மலையக நகரங்களுக்கும் வரும் வாகனங்கள் பொலிஸாரினாலும், படையினராலும் கேந்திர ஸ்தானங்களில் வைத்து சோதனையிடப்பட்டு வருகின்றன. இதேவேளை கண்டி தலதா மாளிகையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் நேற்றுமுதல் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

### பரிமளாதேவி காயமுற்றார்

பண்ணை பொலிஸ் விடுதி முகாமிலிருந்து நேற்று நண்பகலளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த கொட்டடி முத்தமிழ் வீதியைச் சேர்ந்த பரிமளாதேவி(30) யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பாடசாலைகள் வழமைபோல

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி உட்பட நகரில் உள்ள பாடசாலைகள் நேற்று வழமைபோல நடைபெற்றன. யாழ்நகரும் வழமைக்கு திரும்பியது. எனினும் பஸ்சேவைகள் ஆரியகுளம், வின்சர் சந்தியில் இருந்து நடைபெற்றன.

## மீனவர்களைக் காணவில்லை!

பருத்தித்துறை கடற்பகுதியில் படகில் மீன் பிடிக்கச் சென்ற நால்வர் இதுவரையும் வீடு திரும்பவில்லை என உறவினர் யாழ். அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். கணேசமூர்த்தி [70] ஐந்து பிள்ளைகளின் தந்தை, பொ. குருநாதன் [22], சு. உதயகுமார் [25] இரு பிள்ளைகளின் தந்தை, சு. சந்திரசேகர் [36] ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆகியோரே காணமல் போனவர்களாம்.

இதேபோல குடத்தனை-

நாகர் கோவில் கடலில் மீன் பிடிப் படகில் தனிமையில் சென்ற ஏ. ஞானப்பிரகாசம் என்பவரும் காணமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது படகு எரிந்த நிலையில் அரைகுறையாக கடலில் கண்டுபிடிக்கப்பட்டது.

எஸ். ஜெயராம், இ. துரைசாமி ஆகியோர் சென்ற மற்றொரு படகும் காணமல் போனதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கோப்பாயில்...

தான அப்புலிங்கம் ஜெகதீஸன் [ராசன்] என்ற இளைஞரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். இதே இடத்தை சேர்ந்த எஸ். இராமச்சந்திரன் [46] என்பவருடன் மோட்டார் சைக்கிள் ஒன்றில் நாவற்குழிக்கு இவர்கள் இருவரும் சென்றுகொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றது.

ஹெலிகப்டர் தாழப்பறந்து வந்து சுட்டபோது ஒருவர் பாலத்திற்குக் கீழேயும், மற்றவர் பற்றைகளுக்குள்ளும் ஒளித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த இராமச்சந்திரனுக்கு யாழ். வைத்தியசாலையில் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

### கண்டி வீதியில்..

வரத்துக்கள் முற்றாகத்தடைப்பட்டன.

இதேவேளை பரந்தன், கிளிநொச்சி இராணுவ முகாம்களில் மேலதிகமாகக் கொண்டு வரப்பட்ட ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் நவீன பீரங்கி, கவசவண்டிகள் பலவும் வடக்கு நோக்கி பயணத்தை எந்த நேரமும் தொடரக் கூடிய நிலையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கூரைத்தகடுகளையும் மற்றும் பொருட்களையும் ஏற்றிச் சென்ற பல தனியார் லொறிகளில் இருந்த பொருட்கள் இறக்கப்பட்டு இராணுவ தளபாடங்கள் ஏற்றப்பட்ட நிலையில் பரந்தன், கிளிநொச்சி முகாம்களில் அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## இராணுவ அதிகாரிகளால் ஏமாற்றப்பட்ட சிப்பாய்

(வல்வெட்டித்துறை)

ஹெலிக்கப்டர் மூலம் இராணுவமுகாம் வந்தடைந்த புதிய சிப்பாய் ஒருவன் அங்குள்ள சிப்பாயிடம் சிறிது நேரங்கழித்து வந்து மச்சாங் (சிங்களத்தில்) வெளியே போய் சிகரட் அடித்திட்டு வருவம் வாவேன் என்று கேட்டானாம்.

அதற்கு அங்கிருந்த சிப்பாய் மச்சாங்! வெளியே கொட்டியா நிற்குது போகமுடியாது என்றானாம். அதற்கு புதிய சிப்பாய் அநுராதபுரத்திலும் வெளியே கொட்டியா நிற்கிறாங்களோ என்றானாம். அதற்கு பழைய சிப்பாய் நீ வந்திருப்பது யாழ்ப்பாண கோட்டை இராணுவ முகாம் என்றானாம். அவ்விதம் ஏமாற்றப்பட்டு, அநுராதபுரம் என்று சொல்லி யாழ்ப்பாணம், பலாலி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முகாம்களில் கொண்டுவந்து இறக்கப்படுகின்றனராம் புதிய புதிய இராணுவ சிப்பாய்கள். இவ்விதம் தப்பி வந்த இராணுவ சிப்பாய்களிடமிருந்து தகவல்கள் தெரியவருவதாக கடந்த மாலை நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வீரவேங்கை ஒருவர் கூறினர்.

## பலாலி இராணுவ முயற்சி புலிகளால் முறியடிப்பு

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஹெலிகப்டரின் உதவியுடன் வெளியே வருவதற்கு ராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட முயற்சி புலிகளின் பலத்த எதிர்த் தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டது.

காலை பத்துமணி முதல் நண்பகல் வரை இருதரப்பினருக்குமிடையே இப் பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்றன. இப் பகுதியிலிருந்து பலத்த குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

இம்மோதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த சிப்பாய்களின் விபரம் தெரியவில்லை. எனினும் பல இடங்களில் இரதத அடையாளங்கள் காணப்பட்டன. புலிகளின் தரப்பில் இழப்பெதுவும் ஏற்படவில்லை.

### வார இறுதியில் வகுப்புகள்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்தியத்தின் உயர் தொழில் ஆங்கில சான்றிதழுக்கான வகுப்புக்களின் விரிவுரைகள் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறுமென யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு ந. மகாதேவன் அறிவித்துள்ளார்.

புதன்கிழமைகளில் நடாத்தப்படவிருந்த வகுப்புக்கள் சனி, ஞாயிறு வகுப்புக்களுடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் வகுப்புகள் நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஆனையிறவில் ..

மீறி பஸ் தொடர்ந்து சென்றதினாலேயே பஸ்ஸின் மீது இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

### அரசாங்க அறிவிப்பு

இந்தியாவில் இருந்து வடபகுதியை நோக்கி வந்த படகு ஒன்றை தனது கடற்படை தாக்கி மூழ்கடித்துள்ளதாக இலங்கை அரசு நேற்றிரவு அறிவித்தது. இத்தாக்குதலின் போது அந்த படகில் இருந்த எவரும் உயிர்தப்பவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

### கமாண்டோக்கள்...

துங்காவும் நேற்று பலாலி முகாமிற்கு விஜயம் செய்திருந்தார். முக்கிய ஆலோசனை ஒன்றிலும் இவர் கலந்து கொண்டதாகவும் தெரியவருகிறது.

### அதிர்ச்சியால்...

தபயப்பு(84 வயது) அவ்விடத்திலேயே அதிர்ச்சியினால் மாரடைத்து மரணமானார்.

திரு. குணசிங்கம் என்பவரும், அவரது சகோதரிகளும் தமது வேலியினை இராணுவம் வெட்டி வருவதனைக் கண்டவுடன் தாம் ஓடத் தொடங்கியதாகவும் - தம்மைச் சூழ துப்பாக்கி ரவைகள் சீறியபடி சென்றபோதும் அதிர்ஷ்டவசமாக காயமடையாமல் தப்பி-குட்டியப்புலத்திற்கு வந்து விட்டதாகத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 19-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.